## கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : **1898 / 2007 /** எம்சி. **8** நாள் **7.3.2007**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – 2007-2008ம் நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை சிறப்புக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது – சம்பந்தமாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் 2007-2008ம் நிதி ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை சிறப்புக் கூட்டம் வருகின்ற 14.3.2007ம் தேதி புதன் கிழமை காலை 10-00 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்துத் துறை தலைமைகள், மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு : கூட்டக்குறிப்பு

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

/ உண்மைநகல் உத்திரவின்படி/

மாமன்றச் செயலாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

நகல் :
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# கோயம்புத்துர் மாநகராட்சி
# நிதிநிலை அறிக்கை சிறப்புக் கூட்டம்
## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br><br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண். | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1. | கோயம்புத்தூர் மாநகராட்சி – பொது நிதி குடிநீர் வடிகால் நிதி மற்றும் தொடக்க கல்வி நிதிகளின் 2006-2007-ம் வருட திருத்தப்பட்ட மதிப்பீடு - 2007-2008ம் வருடத்திற்கான திட்ட வரவு செலவு மதிப்பீடு – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டப் பணிகள் - வரவு செலவு அறிக்கை மாமன்ற ஒப்புதல் கோருதல் - சம்மந்தமாக. |
| | நன்றியுரை |

## திருக்குறள்

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.

(390)

## விளக்கம்

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும் மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

- திருவள்ளுவர்.

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய / குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

பொருள் எண் 1

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சியின் பொதுநிதிஇ குடிநீர் வடிகால் நிதி மற்றும் தொடக்க கல்வி நிதிகளின் 2006-2007ம் வருட திருத்தப்பட்ட மதிப்பீடும் 2007-2008ம் வருடத்திற்கான திட்ட வரவு செலவு மதிப்பீடு மாமன்ற ஒப்புதலுக்கு வைத்தல் –சம்மந்தமாக.

கோவை மாநகராட்சியின் பொது நிதிஇ குடிநீர் வடிகால் நிதி மற்றும் தொடக்க கல்வி நிதிகளின்படி 2006-2007ம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீடும், 2007-2008 ஆண்டிற்கான திட்ட வரவு செலவு மதிப்பீடும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள உள்ள பணிகளுக்கான வரவு, செலவு அறிக்கையும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு பரிசீ.க்கப்பட்டு ஒப்புதலுடன் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு– அங்கீகரிக்கலாம் (ந.க.எண்.26638/2006/பி1)

**மாநகர மன்ற தீர்மானம் எண்.293 நாள்.15.3.2007**

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி